# மேலைத்தேச நாடுகளின் அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் தலைவர்கள்: தேர்ந்தெடுக்கப்பட்ட தென்னாசிய தலைவர்களை பற்றிய ஆய்வு

**கிருத்திகா, சி., கணேசலிங்கன், கே.ரீ.**
அரசறிவியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
kiruthika199797@gmail.com

*ஆசிய, ஆபிரிக்க, இலத்தின் அமெரிக்க நாடுகள் யாவும் பெருமளவுக்கு மேற்கு சக்திகளின் காலனித்துவத்திற்கு உட்பட்ட வரலாற்றைக் கொண்டவையாகவே காணப்படுகின்றன. காலனித்துவ காலப்பகுதியில் இந்த நாடுகளில் அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக பல மாற்றங்களை ஏற்படுத்தி இருந்த போதும் அவற்றினுடைய வளங்கள் சுரண்டப்பட்டு வந்துள்ளது. இவ்வாறாக அடிமைப்பட்ட வரலாற்றைக் கொண்டிருந்த கீழைத்தேசங் களையே கண்டு வந்த இவ்வுலகில் இன்றைய காலத்தில் மேற்கு நாடுகளுக்கு தலைமை தாங்குபவர்களாக கீழைத்தேசத்தவர்கள் குறிப்பாக தென்னாசியாவைச் சேர்ந்தவர்கள் விளங்குவதென்பது கீழை நாட்டினதும், மேற்குலகத்தினதும் வரலாற்றிலும், அரசியலிலும் புதியதொரு வழித்தடமாகும். முற்றிலும் வேறுபட்ட பாரம்பரியத்தையும், பூர்வீக வரலாற்றையும் கொண்டிருக்கும் தென்னாசியாவைச் சேர்ந்த சில ஆளுமைகள் அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, நோர்வே போன்ற மேற்குலக ஐரோப்பிய நாடுகளில் பிரதான அரசியல் தலைமைத்துவ பொறுப்புகளில் காணப்படுகின்றனர். தென்னாசியாவை சேர்ந்த தலைவர்களின் தலைமைத்துவத்தையும் வழிநடத்தல்களையும் மேற்குலக நாட்டவர்களும் சர்வதேச அரங்கும் ஏற்றுக்கொள்வதென்பது உலக அரசியலுக்கு புதியதொரு விடயமாகவே நோக்கப்படுகின்றது. அத்தகைய தென்னாசிய தலைவர்களின் அரசியல் செயற்பாடுகளும், பங்களிப்புகளும் பல எதிர்பார்ப்புகளையும் தூண்டுவதோடு அனைவராலும் உன்னிப்பாக உற்று நோக்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில் தென்னாசியாவினை சேர்ந்த சில தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் ஆளுமைகளான கமலா ஹாரிஸ், ரிக்ஷி சுனக், ஹரி ஆனந்த சங்கரி, ஹம்சாயினி குணரத்னம் போன்றோரது அரசியல் பங்களிப்புகளையும், பணிகளையும் நோக்கும் விதத்தில் ஆய்வானது அமைந்துள்ளது.*

**திறவுச் சொற்கள் :** அரசியல் தலைமைத்துவம், அரசியல் பங்களிப்பு, மேற்குலக நாடுகள், கீழைத்தேச நாடுகள், தென்னாசியா